**D**

**SL. No. : W**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 57 ]
Total No. of Questions : 57 ]
ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**CCE PR**
**REVISED & UN-REVISED**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8
**Code No. : 85-T**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater)**

ದಿನಾಂಕ : 27. 06. 2018 ] [ Date : 27. 06. 2018
ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.

2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.

3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.

4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.

5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. துணைப்படைத் திட்டத்தை கொண்டுவந்த ஆங்கில கவர்னர் ஜெனரல்

   (A) வாரன்ஹேஸ்டிங்ஸ் (B) வெல்லெஸ் பிரபு

   (C) டல்ஹௌசி பிரபு (D) காரன்வா ஸ் பிரபு.

2. 2001-ஆம் ஆண்டு 6 முதல் 14 வயது குழந்தைகளுக்கு இலவச கல்வியை வழங்க மத்திய அரசு கொண்டுவந்த திட்டம்

   (A) தேசிய கல்விக்கொள்கை (B) சக்ஷரா பாரத்

   (C) சர்வசிக்ஷ அபியான் (D) தேசிய முதியோர் கல்வி திட்டம்.

3. **“அ”** பிரிவில் தலைவரின் பெயர்களும், **“ஆ”** பிரிவில் அவர்களின் நாட்டுப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. சரியான இணையைக் கண்டுபிடித்து எழுதுக.

| **பிரிவு - அ** | **பிரிவு - ஆ** |
|---|---|
| (a) லெனின் | (i) சீனா |
| (b) ஹிட்லர் | (ii) ரஷ்யா |
| (c) முசோ னி | (iii) ஜெர்மனி |
| (d) மா-சே-துங் | (iv) இத்தா . |

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | i | ii | iii | iv |
| (C) | iv | i | ii | iii |
| (D) | iii | iv | i | ii. |

4. ஐ.நா. சபையின் தலைமையகம் எங்குள்ளது ?

   (A) நியூயார்க் (B) பாரீஸ்

   (C) ரோம் (D) ஜெனிவா.

5. குழந்தை தொழிலாளர் முறையைத் தடுக்க கொண்டுவரப்பட்ட மத்திய அரசின் சட்டப்பிரிவு எது ?

   (A) சட்டப்பிரிவு-21 (B) சட்டப்பிரிவு-17

   (C) சட்டப்பிரிவு-52 (D) சட்டப்பிரிவு-24.

6. இந்திய வரைபடத்தில் குறிக்கப்பட்ட சரியான காடுகளின் இணையைக் கண்டுபிடித்து எழுதுக.




(A) 1 — மாங்குரோவ் காடுகள், 2 — பாலைவனக் காடுகள், 3 — பசுமை மாறாக் காடுகள்

(B) 1 — பசுமை மாறாக் காடுகள், 2 — மாங்குரோவ் காடுகள், 3 — பாலைவனக் காடுகள்

(C) 1 — மாங்குரோவ் காடுகள், 2 — இமயமலை ஆல்பைன் காடுகள், 3 — பசுமை மாறாக் காடுகள்

(D) 1 — பாலைவனக் காடுகள், 2 — பசுமை மாறாக் காடுகள், 3 — மாங்குரோவ் காடுகள்.

7. இந்தியா தன்னுடைய பிரதேசம் GPS ஏற்பாட்டைப் பெறுவதற்கு வெற்றிகரமாக எத்தனை செயற்கைகோள்களை விண்ணில் ஏவியுள்ளது ?

(A) 3 (B) 5

(C) 6 (D) 7.

8. பின்வருவனவற்றுள் எது மறைமுக வரி ?

(A) வருமான வரி (B) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரி

(C) சொத்து வரி (D) கம்பெனி வரி.

9. வங்கிகளின் வங்கி எது ?

(A) விஜயா வங்கி (B) கனரா வங்கி

(C) ரிசர்வ் வங்கி (D) கார்பரேஷன் வங்கி.

10. எந்த சாதனை வர்கீஸ் கூரியனுக்கு 'வெண் புரட்சியின் தந்தை' என்ற பட்டத்தை வாங்கி தந்தது ?

(A) அப்பல்லோ மருத்துவமனை ஏற்படுத்தியது

(B) வான்வழி ஜெட் விமானம் அமைத்ததற்காக

(C) ரிலையன்ஸ் கம்பெனியை ஏற்படுத்தியதற்கு

(D) ஆனந்த் / அமுல் பால்பண்ணையை ஏற்படுத்தியதற்காக.

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரியில் விடையளி : 14 × 1 = 14

11. சாதாரண மக்களின் வரலாற்றை எழுதுவது வரலாற்றாளர்களுக்கு ஒரு சவாலாக உள்ளது. ஏன் ?

12. ஹிட்லர் சர்வாதிகாரி ஆவதற்கு ஜெர்மானிய தொழில் அதிபர்கள் எவ்வாறு உதவினர் ?

13. இன்றும்கூட ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகர மக்கள் போரின் அழிவு இன்ன ருந்து விடுபடாது அவதியுறுகின்றனர். இவ்வழிவுக்கு ஜப்பான் செய்த தவறு என்ன ?

14. பாகிஸ்தான் இந்தியாவுடன் நல்லுறவை மேற்கொள்ள தவறிவிட்டது. ஏன் ?

15. குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக ஐ.நா.வின் யுனிசெப் ( UNICEF ) எவ்வாறு செயல்படுகிறது ?

16. சம ஊதியச் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது ?

17. பெண்கரு சிதைவால் ஏற்படும் தீமைகள் யாவை ?

18. கங்கை நதி படுகையில் காணப்படும் மாங்குரோவ் காடுகள் ஏன் சுந்தரவனக் காடுகள் எனப்படுகின்றன ?

19. பெங்களூர் இந்தியாவின் “சி கான் நகரம்” என ஏன் அழைக்கப்படுகிறது ?

20. GIS ( புவிஇயல் தொடர்பான விவரங்களின் ஒழுங்குமுறை ) உலகில் முதன்முத ல் எங்கு பயன்படுத்தப்பட்டது ?

21. “இந்தியாவின் மான்செஸ்டர்” என்று மும்பை ஏன் அழைக்கப்படுகிறது ?

22. “இந்திய பொருளாதார திட்டத்தின் தந்தை” என சர். எம். விசுவேசுவரய்யா ஏன் அழைக்கப்படுகிறார் ?

23. நிதிநிலை அறிக்கை ( Budget ) என்றால் என்ன ?

24. பேங்க்வெ ( Banque ) என்ற பிரெஞ்சு மொழிச் சொல் ன் பொருள் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டி ருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளி :

$25 \times 2 = 50$

25. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி முகலாயப் பேரரசின் வீழ்ச்சி காலம் என ஏன் அழைக்கப்படுகிறது ?

26. ஆங்கிலேயருக்கு சென்னை அமைதி உடன்படிக்கை ஏன் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது ?

27. இந்திய வரலாற்றில் 19-ம் நூற்றாண்டு 'இந்திய மறுமலர்ச்சி காலம்' என ஏன் கருதப்படுகிறது ?

28. ஜுனாகாட் மாநிலம் இந்திய திருநாட்டுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது ?

*அல்லது*

கோவா போர்த்துகீசியரிடமிருந்து எவ்வாறு விடுதலை அடைந்தது ?

29. இந்தியாவில் மாநில உணர்வை ஏற்படுத்தும் அம்சங்கள் யாவை ?

30. உலக அரங்கில் இந்தியா செல்வாக்கு கொண்ட நாடாக எவ்வாறு திகழ்கிறது ?

31. இந்தியாவில் தற்போது தீண்டாமை வன்கொடுமை குறைந்துள்ளன. காரணங் கூறுக.

32. இந்தியாவின் மேற்கு கடற்கரைச் சமவெளி எவ்வாறு கிழக்கு கடற்கரைச் சமவெளியி ருந்து வேறுபடுகிறது ?

33. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் அம்சங்கள் யாவை ?

34. மண் அரிப்புக்கான காரணங்கள் யாவை ?

35. இந்திய விவசாயம் எவ்வாறு இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழில் பிரிவினருக்கு வேலைவாய்ப்பைத் தருகிறது ?

36. நிலச்சரிவால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

37. மக்கள்பெருக்கத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

38. தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம் மட்டுமே ஒரு நாட்டின் முன்னேற்றத்தின் உண்மையான அளவுகோலாக இருப்பதில்லை. ஏன் ?

39. உலகமயமாக்கல் எவ்வாறு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துகிறது ?

40. எந்த புதிய அறிவியல் சாதனங்கள் கடல் பயணத்தில் மாலுமிகளுக்கு உதவியது ?

41. ஐதராபாத் கருநாடகப் பகுதிகள் யாவை ?

42. வகுப்பு இனஉணர்வால் ( communalism ) ஏற்படும் தீமைகள் யாவை ?

43. ஐ.நா. சபையின் ஆறு முக்கிய உறுப்புகள் யாவை ?

44. குழந்தை தொழிலாளர்கள் உருவாவதற்கான காரணங்கள் யாவை ?

45. இந்தியாவில் காணப்படும் முக்கிய மண்வகைகள் யாவை ?

46. இந்தியாவில் விளைவிக்கப்படும் பூக்கள் யாவை ?

47. நீர்ப்பாசன வகைகள் யாவை ?

48. வளர்ச்சியற்ற நாடுகளின் குண இயல்புகள் யாவை ?

49. பல்வகை வங்கி கணக்குகள் யாவை ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

50. கி.பி. 1857-ல் ஏற்பட்ட பெரும்புரட்சியின் தோல்விக்கான காரணங்கள் யாவை ?

*அல்லது*

கல்வி மற்றும் பத்திரிக்கைத் துறை வளர்ச்சி எவ்வாறு விடுதலைப் போராட்டத்திற்கு வழிவகுத்தது ? விளக்குக.

51. இந்தியா மற்றும் சீனா உறவு எதிர்பாராத வகையில் எவ்வாறு ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக உள்ளது ?

*அல்லது*

தீவிரவாதம் சட்டத்திற்கு புறம்பானது மற்றும் சமூக விரோதச் செயல் என்பதை விளக்குக.

52. வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வாறு ஒரு முக்கிய சமூகப் பிரச்சினையாகும் ? விளக்குக.

*அல்லது*

பெண்களின் அதிகார மையத்தில் பெண்களின் சுயஉதவி குழுக்களின் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

53. ஆற்றல் வளங்களின் குறைபாட்டைப் போக்க எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

சாலை போக்குவரத்தின் பிரச்சனைகள் யாவை ?

54. இந்திய பொருளாதார முன்னேற்றத்திற்கு ஐந்தாண்டு திட்டங்ள் ஆற்றிய அரும்பங்கினை விவரி.

*அல்லது*

கிராமிய வளர்ச்சியில் பஞ்சாயத்து ராஜ் சபைகளின் பங்களிப்பை விவரி.

55. ஆயுள் காப்பீடு நிறுவனங்களால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

*அல்லது*

தொழில் முனைவோரின் பண்பு நலன்கள் யாவை ?

V. பின்வரும் வினாவிற்கு எட்டி ருந்து பத்து வாக்கியங்கள் வரை விடை தருக : 4

56. விடுதலை இந்தியாவின் வளர்ச்சிக்கு ஜவஹர்லால் நேரு ஆற்றிய பங்களிப்பு குறித்து விவரி.

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வருமிடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு அட்சரேகை

b) நாகார்ஜுன சாகர் அணைத் திட்டம்

c) கொச்சி.

**பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா : (வினா எண் 57க்கு மாற்று வினா)**

இந்திய மக்களுக்கு இமயமலையினால் ஏற்படும் நன்மைகள் யாவை ? 4